பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 18 வெள்ளிக்கிழமை (03.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 247

# இலங்கையின் மனித உரிமை நிலை குறித்து சர்வதேசப் பங்களிப்புடன் கண்காணிப்பு!

## அமெ.வெளிவிவகாரக் குழுவில் வலியுறுத்தல்

நியூயோர்க், ஓகஸ்ட் 03

**இலங்கையில் மனித உரிமை நிலை குறித்து சர்வதேச மட்டத்திலான பங்களிப்போடு நேரடியாகக் கண்காணிக்க வேண்டிய அவசரமும் அவசியமும் எழுந்திருக்கின்றது.**

**- இவ்வாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் அமெரிக்கக் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் ஒருவர் வலியுறுத்தியிருக்கின்றார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் நியூஜேர்ஸி மாநில காங்கிரஸ் உறுப்பினர் பிராங் பலோன் இப்படி வற்புறுத்தினார்.

"இலங்கையில் புதிதாகத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் மேலும் நூற்றுக்கணக்கானோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எவ்வித குற்றச்சாட்டுமின்றி ஆட்களைக் கைதுசெய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் புதிதாகத் தீவிரப்படுத்தப்பட்ட சட்டவிதிகள் பரந்தளவிலான அதிகாரங்களை அரசுக்கு வழங்குகின்றன" - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இலங்கை தொடர்பான காங்கிரஸ் குழுவின் நிறுவுநராகவும், உப தலைவராகவும் நான் இருக்கின்றேன். எனவே, இந்த அடிப்படையில் இலங்கையில் சீர்கேடடைந்து வரும் நிலைவரத்தை இங்கு விளக்குகிறேன்" என்ற பீடிகையோடு அவர் தம் உரையை அங்கு ஆரம்பித்துள்ளார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் புதனிரவு மாணவன் கடத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 3

கோப்பாயில் பாடசாலை மாணவன் ஒருவன் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த ராஜேந்திரம் பவதீபன் (வயது 15) என்ற மாணவனே கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## பதுளை வனப்பகுதியில் தீ

கொழும்பு, ஓக.3

பதுளை நீர்ஊற்று வனப் பிரதேசத்தில் ஏற்பட்ட தீயினால் ஐந்து ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காட்டுப்பகுதி அழிந்துள்ளது.

பதுளை நடுகாரகந்த என்ற இடத்திலே இத் தீ ஏற்பட்டிருந்தது. இத்தீ பரவுவது

(08 ஆம் பக்கம் பார்க்க)

# நாடுகள் சில கூறுகின்றன என்பதற்காக அரசு யுத்தத்தை ஒருபோதும் நிறுத்தாது

## அமைச்சர் ஜெயராஜ் கூறுகிறார்



கொழும்பு, ஓக.3

"ஒருசில நாடுகள் கோரிக்கை விடுக்கின்றன என்பதற்காக யுத்தத்தை நிறுத்துவதற்கோ அல்லது பின்வாங்குவதற்கோ அரசு இப்போது தயாரில்லை."

- இவ்வாறு ஆளும் கட்சி கொறடாவும் நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

அரச ஊடக திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை யாவன :-

வடக்கில் யுத்தம் மூண்டால், அங்குள்ள பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர் என

(08 ஆம் பக்கம் பார்க்க)

## தொழில்நுட்ப நிறுவன மாணவன் நேற்றுக்காலை சிங்களவகுப்புக்குச் செல்லும் வழியில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவன் ஒருவர் நேற்றுக்காலை 7.30மணியளவில் திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கண்டிவீதி,கச்சேரியடி, யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த தணிகாசலம் சசிரூபன் (வயது 25) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் குறித்து யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா மரணவிசாரணை நடத்தினார்.

திருநெல்வேலிப் பகுதியில் நடைபெறும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அரசிலிருந்து விலகியது இ.தொ.கா.!

கொழும்பு,ஓக.3

அரசிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்று விலகியது.

அக்கட்சியின் சார்பில் அரசில் அங்கம் வகித்த கட்சித் தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் மற்றும் நான்கு பிரதி அமைச்சர்களும் தங்களது பதவி விலகல் கடிதங்களை நேற்று ஜனாதிபதியின் செயலாளரிடம் ஒப்படைத்ததுடன் தற்போதைய அரசில் இ.தொ.காவின் பங்களிப்பு முடிவுக்கு வந்தது.

நேற்று ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷவுக்கும், இ.தொ.கா. தலைவர்களுக்கும் இடையில் நடந்த ஒரு சந்திப்பில் வாக்குவாதம் முற்றி, முரண்பாடு தீவிரமடைந்ததை அடுத்தே இந்தத் திடீர் விலகல் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இளைஞர் சக்தி வளம், சமூகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பதவியிலிருந்து இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் விலகினார்.

அதேசமயம், தபால் பிரதி அமைச்சர் பதவியிலிருந்து எம்.எஸ்.செல்லச்சாமியும், தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் பதவியிலிருந்து முத்து சிவலிங்கமும், கல்வி பிரதி அமைச்சர் பதவியிலிருந்து எஸ்.சச்சிதானந்தனும், தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் பதவியிலிருந்து எஸ்.ஜெகதீஸ்வரனும் விலகினர்.

இ.தொ.காவைச் சேர்ந்த எம்.பியான வி.புத்திரசிகாமணியும் தமது கட்சியினருடன் சேர்ந்து அரசுப் பக்கத்திலிருந்து எதிரணிக்கு வருவார் எனத் தெரிகின்றது.

எனினும் ஏற்கனவே இ.தொ.காவிலிருந்து தம்பாட்டில் அரசுப்பக்கம் பாய்ந்து பிரதி அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டிருக்கும் சுகாதாரப் பிரதி அமைச்சர் வடிவேல் சுரேஷும், உல்லாசப் பயணத்துறை பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவும் தொடர்ந்தும் அரசுப்பக்கமே இருப்பர் எனக்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு நாடாளுமன்றில் மயிரிழை பெரும்பான்மை!

கொழும்பு, ஓக. 3

அரசுப் பக்கத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேறியதை அடுத்து நாடாளுமன்றில் தற்போதைய அரசின் பெரும்பான்மைப் பலம் மயிரிழையில் ஊசலாடும் கட்டத்தை அடைந்திருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழி[illegible]ாளர் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய போன்றவை அரசுப் பக்கம் சாய்ந்ததை அடுத்து நாடாளுமன்றில் அரசுத் தரப்பு எம்.பிக்களின் எண்ணிக்கை 121 ஆக இருந்தது.

அதன் பின்னர் மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோர் எதிரணிப் பக்கத்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மங்கள பக்கம் இ.தொ.கா. சாய்ந்ததால் வந்த விளைவு?

கொழும்பு,ஓக.3

அரசுத் தரப்பிலிருந்து வெளியேறிய மங்கள சமரவீர - சிறிபதி சூரியாராய்ச்சி அணியின் பக்கம் இ.தொ.காவின் தலைமை, அதிகம் தொடர்பு வைத்து அதனுடன் நெருங்கிச் செயற்பட முயற்சித்த காரணத்தினாலேயே அக்கட்சியோடு அரசுத் தலைமை முறுகும் நிலைமை உருவானது.

- இப்படி அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

மங்கள அணியுடன் இ.தொ.காவினர் மிக நெருக்கமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளனர் என்ற புலனாய்வுத் தகவல்கள் அரசுத் தலைமைக்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலை அதிகரிப்பை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்

### கொழும்பில் மகளிர் அணி களத்தில்

கொழும்பு,ஓக. 3

பால்மா விலை அதிகரிப்பைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியின் மகளிர் அணியினர் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்துகின்றனர்.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இன்று பிற்பகல் 4 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் தலைமை வகிக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சியின் மகளிர் அணி உறுப்பினர்களும் இதில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலையில் நேற்றும் மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.பல்கலைக்கழக ஊடகவள பயிற்சி மையத்தின் இதழியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவனான சகாதேவன் நிலக்ஷன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களின் மாணவர்களும் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

கலைப்பீட மாணவர்கள் புதன்கிழமையே வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். நேற்று சகல பீடங்களைச் சேர்ந்த மாணவர்களும் பகிஷ்கரிப்பை ஆரம்பித்தனர்.

நிலக்ஷனின் இறுக்கிரியைகள் நடைபெறவுள்ள இன்றும் சகல பீடங்களைச்சேர்ந்த மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பல்கலைக்கழகவளாகத்தில் எங்கும் கறுப்புக் கொடிகள்பறக்கவிடப்பட்டிருந்தன. (அ-1)

## உயிர்அச்சுறுத்தல் காரணமாக பெண் உட்பட மூவர் நேற்றுச் சரண்

யாழ்ப்பாணம்,ஓக.3

உயிர் அச்சுறுத்தல் காரணமாக பெண் ஒருவர் உட்பட மூவர் மனிதஉரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் சரண்அடைந்தனர்.

நேற்றுமட்டும் குருநகரைச் சேர்ந்த தாயும் மகனும், மந்துவிலைச்சேர்ந்த ஒருவருமாக மூவர் சரணடைந்தனர்.

இவர்கள் ஆணைக்குழு அதிகாரிகளால் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் மூவரையும் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர் செய்தனர். இவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 2வாரங்களில் 40 பேர் உயிர்அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-1 [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகப் புகழ்பெற்ற ஆன்மீக குரு
தவத்திரு
**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்**
**வாழும் கலைப் பயிற்சி**
**(சிறுவர்களுக்கானது)**

- சிறுவர்களின் திறமையை வெளிக் கொணர
- அமைதியான தெளிவான மனம்
- தலைமைத்துவ பண்பை வளர்க்க
- பயத்தையும் கூச்ச சுபாவத்தையும் போக்க

8-13 வயது வரையானவர்களுக்கான ART EXCEL
பயிற்சி காலை 8.30 மணிமுதல் 10.30 மணி வரை
14-18 வயது வரையானவர்களுக்கான YES பயிற்சி
காலை 10.30 முதல் 12.30 மணி வரை

இடம்: கம்பன் கோட்டம், கோயில் வீதி,நல்லூர்.
பயிற்சி நாள்: நாளை சனி முதல் வியாழன் வரை
இன்று முற்பதிவுகள் கம்பன் கோட்டத்தில்.
குறிப்பு: ஏற்கனவே பயிற்சி எடுத்தவர்களுக்கு வரும் ஞாயிறு காலை 7 மணிக்கு சுதர்சனகிரியா நடைபெறும்.

தொ.பே: 0776079220
0777250879.
மேலும் விவரங்களுக்கு:
சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்,
யாழ்ப்பாணம்.
(66144)

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபரும், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபருமாகிய
திருமதி செ. சகாதேவன்
அவர்களின் பாசமிகு மகன்
**செல்வன் ச. நிலக்ஷன்**
அவர்களின் திடீர் மறைவிற்கு வருந்துகிறோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, துயருறும் அவரது குடும்பத்தவர் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

(63158)
பாடசாலைச் சமூகம்,
யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

# கண்ணீர் அஞ்சலி



எமது மையத்தின் முழுநேரக் கற்கைநெறி மாணவரான
**சகாதேவன் நிலக்ஷன்**
அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர், பயிற்சி இணைப்பாளர், பயிற்றுநர்கள்,
ஊழியர்கள் மற்றும் மாணவர்கள்,
ஊடகவளங்கள் மற்றும் பயிற்சிமையம்.
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(சி-53128)

# மரண அறிவித்தல்கள்

## சகாதேவன் நிலக்ஷன்



(யாழ். பல்கலைக்கழக ஊடகவியல் இரண்டாம் வருட மாணவன்)

இல. 47, புகையிரத நிலைய வீதி, கொக்குவிலைச் சேர்ந்த சகாதேவன் நிலக்ஷன் 01.08.2007 புதன்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் சகாதேவன் - செல்வராணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் சதுர்ஷனின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2007) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.47, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (63159)
தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னையா இராசரத்தினம்



கோப்பாய் தெற்கு, பழையவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் (01.08.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், கைதடி வடக்கை சேர்ந்த அமரர்களான ஐயம்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தேவமனோகரி (கனடா), ஜெகதீஸ்வரி (வதனா), நவரத்தினராசா (கனடா), குணரத்தினராசா (பிரான்ஸ்), யோகரத்தினராசா (யோகு), புஸ்பமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசசேகரம், பரமேஸ்வரன், மல்லிகாதேவி, வனஜநாயகி, விஜயலட்சுமி, உமைபாகன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு. (63160)
தகவல்:
குடும்பத்தினர்.

# சாரதி அனுமதிப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக. 3

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கானஎழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகளுக்கான திகதி ஒழுங்குகள் நேற்றுத் தொடக்கம் வழங்கப்படுகின்றன என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்பித்தவர்கள் அலுவலக நாள்களில் நண்பகல் 12 மணிவரை சமுகமளித்து பரீட்சைக்கான திகதியை பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# ஆஸ்பத்திரியில் திருடிய மோட்டார் சைக்கிள் சுன்னாகத்தில் பிடிபட்டது

யாழ்ப்பாணம், ஓக. 3

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த 27ஆம் திகதி காணாமற்போன மோட்டார் சைக்கிள், சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை அடையாளம் கண்டு, அதை மீட்டுள்ளனர். அந்த மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவரும் கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபர் மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் முன்னேற்று ஆஜர் செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# சங்கானை மத்தியில் நேற்றுத் தேடுதல்

சங்கானை, ஓக. 3

சங்கானை மத்தியில் உள்ள பகுதிகள் நேற்றுக்காலை 5 மணியளவில் படையினரால் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

வீடு வீடாகத் தேடுதல்களை நடத்திய படையினர் இளவயதினரை சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு செல்லப்பணித்தனர்.

அங்கு வைத்து அவர்கள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டபின் விடுவிக்கப்பட்டனர். (அ-1-29)

## தவறிவிட்டது

கருங்காலி, காரைநகரைச் சேர்ந்த நடராசா யசோதை என்பருடைய தே. அ. அட்டை (757753774V) யாழ்ப்பாணத்திற்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்
நியூராகம்ஸ் பட்டுச்சோலை,
இல. 24, நவீன சந்தை (உ/புறம்), யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். T.P. 0776618110.


**மானிடப் புவியியல்**
A/L 2008 ஆரம்பம்
04.08.2007 சனி
பொருளியற் கல்லூரி
யாழ். 10.00 இணுவில் 7.00
பாரதி, சித்தங்கேணி: 2.00
P.S.குமரன் B.A.(Hons)
(63157)


## ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் நாளை நடைபெறவிருந்த பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான விருது விண்ணப்பம் பற்றிய விளக்கக் கருத்தரங்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். எதிர்வரும் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மேற்படி கருத்தரங்கு நடைபெறுமெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (1-120)

## பெறுபேறுகள் கிடைத்தன

இலங்கை வங்கிக்கு உதவியாளர்களாக பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்காக கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான தனிப்பட்ட பெறுபேற்று அட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கு பரீட்சைப் பகுதியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-98)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603
அனைத்துப் பாமஸிகளிலும்
கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567


# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 12 - 08 - 1917



மறைவு 04 - 07 - 2007

## திருமதி சின்னத்தம்பி தங்கப்பொன்னு

04.07.2007 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.08.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

"லட்சுமி வாசா"
ஏழாலை மேற்கு,
ஏழாலை. (63153)
சி.சற்குணசிங்கம்
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## பாலசுந்தரம் ஞானரூபன்


தாயின் மடியில் 09.01.1986
ஆண்டவன் அடியில் 13.06.2006

திதி: பஞ்சமி (03.08.2007)

ஈரவிழிகள் காய்ந்து போனாலும்
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
விஞ்சும் பெரு நிலவாய் வழிகாட்டிய ரூபனே
என்றுமே எம் இதயக் கோயிலில் வீற்றிருப்பாய்.
உன் மறைவால் துயருற்றிருக்கும்:

இடைக்குறிச்சி,
வரணி. (66041)
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் செல்லப்பா இராசரத்தினம்

(மாவெள்ளை, இ.போ.ச.சாரதி)

தோற்றம் 24.12.1924
மறைவு 04.07.2007

மாதம் ஒன்று சென்றாலும்
உங்கள் அன்பு முகம் மறையவில்லை
அப்பா! அன்போடு எம்மைத் தூக்கி
நெஞ்சினில் சுமந்த அப்பாவே!
ஆறாத் துயரில் எம்மை விட்டு
ஆண்டவன் அடியில் சேர்ந்தீர்களோ அப்பா!

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது வருகை தந்தோருக்கும் எமது துயரில் பங்குகொண்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (03.08.2007) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி ஒழுங்கை.
கோப்பாய் வடக்கு, (சி.53119)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தேவாலயப் பிரதிநிதிகள் இலங்கை வருகின்றனர்

கொழும்பு, ஓக.3

உலக கிறிஸ்தவ தேவாலயங்களின் ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் சிறப்புக் குழுவொன்று இம்மாதம் இலங்கைக்கு வருகை தருகின்றது.

உலகின் பல பாகங்களிலும் வன்செயல்கள் சூழ்ந்துள்ள பகுதிகளில் வாழும் கிறிஸ்தவ சமூகங்களை சந்தித்து அவர்களின் நிலைமை பற்றி ஆராயும் நோக்கம் கொண்ட இக்குழுவினர் முதற்தடவையாக இலங்கைக்கும் வருகை தருகின்றார்கள்.

2011 ஆண்டில் உலக தேவாலய சபையின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் தேவாலயங்களுக்கிடையிலான அமைதி மாநாட்டையொட்டி தேவாலயங்களின் ஒருங்கிணைப்புக் குழுவினர் பல நாடுகளுக்கும் விஜயம் செய்து கிறிஸ்தவ சமூகங்களைச் சந்தித்து வருகின்றனர்.

இக்குழுவினர் இம்மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 12 ஆம் திகதிவரையில் இலங்கையில் இருப்பார்கள். உள்ளூர் தேவலாயங்க ளின் அமைதி முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் சாத்தியங்கள் குறித்தும் இக்குழுவினர் ஆராய்வார்கள்.

அமெரிக்கா, கென்யா, இந்தோனேஷியா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளின் தேவாலய பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றார்கள்.

உள்ளூரில் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பிரதான தேவாலய மற்றும் அடிமட்ட குடிமக்கள் பிரதிநிதிகளை அவர்கள் சந்திப்பார்கள். (ப)

# சனி மாற்றம் 05.08.2007 முதல் உங்கள் ராசிக்குரிய பலன்

இடபம் இடபம்

சங்கானையூர் சண்முகரத்தினம்

இடபம்:(கார்த்திகை 2,3,4ஆம் கால்களும், ரோகிணி, மிருகசீரிடம், 2ஆம் கால் வரை பிறந்தவர்களுக்கு)

இடப ராசியில் பிறந்த உங்களுக்கு சனி பகவான் 4இல் வந்தபடியால் 05.08.2007 தொடக்கம் அடுத்து 2 1/2 வருடங்களுக்கு சிங்கராசியின் சனி, கேது பகையாக இருப்பதால் பூமி, வீடு, கடை கட்டடம், வானம் மற்றும் கல்வியால் வரக்கூடிய பெறுபேறு இப்படியானவை சம்பந்தமான கஷ்டங்கள் வந்து தீரும். சிலருக்கு நீதிமன்றங்கள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படவும், வீட்டை, நிலத்தை விற்க, ஈடுவைக்க அல்லது மாறு செய்யவும் பலன்வரும். மேலும் தாய்வழி உறவுகள் பாதிக்கப்படும்.

05.08.2007 இல் சனி மாற்றம் தொடக்கம் 10.04.2008 வரை ராகு கேது மாற்றம் வரை புதிய வீடுகள் வாங்கவோ அல்லது வாகனம், பூமி, கடை, கட்டடங்கள் வாங்குவதோ நன்மை தரா பலனாக அமையும்.

**மாணவர்களுக்கு:** கல்வி நிலையில் எதிர் நீச்சல்போட்டு முன்னேற்றப் பலன் உண்டு. சிலருக்கு இடைநடுவில் கல்வியைக் குழப்பி கல்விநிலையை தொடர முடியாத நிலையும் வரும். வதிவிட மாற்றம் அல்லது இருக்குமிடத்தில் ஏற்படக்கூடிய குடியிருப்புச் சம்பந்தமான பிரச்சினை மற்றும் இடமாற்றமும் ஏற்படும் எப்படியாயினும் 2007 வருட இறுதியில் கல்வியைத் தொடர வாய்ப்புகள் உண்டு.

**குடும்பஸ்தர்களுக்கு:** வெளியூர் அல்லது வெளிநாடுகளில் இருந்து கிடைக்கக் கூடிய பண உதவிகள் தடைப்படும். குடியிருக்கும் வீட்டைத் திருத்தி அமைக்கவோ அல்லது புதிய வீட்டை வாங்கவோ அல்லது கட்டிமுடிக்கவோ நன்மைதரக்கூடிய பலனாக அமையாது. மேலும் கணவன், மனைவி உறவுகள் மந்தநிலையில் இருப்பதுடன் கடல்பிரயாணங்களும் தடைப்படும். புத்திரரால் சிறப்புண்டு. திருமணம் ஆகாதவர்களுக்கு 10.04.2008 வரை திருமணம் கைகூடாத தடையுண்டு. அப்பால் நற்பலன் உண்டு.

**உத்தியோகத்தர்களுக்கு:** பணவரவு சுமாரான பலன்தரும் 2007ஆம் ஆண்டு முடியும் வரை தொழில் நிலை உயர்வை எதிர்பார்க்க முடியாத குடும்ப சுகமுண்டு. வாகனம், உடைமை, சொத்துக்கள் சம பலன் தரும். (விஷ்ணு வணக்கம் வினைகள் தீர்க்கும்)

# நிகழ்வுகள்

நல்லூர்,ஓக.3

சாவகச்சேரி பிரதேச அறவழிப் போராட்டக்குழுவின் சிறுவர் தினவிழா நாளை சனிக்கிழமை அறவழிக்குழு தலைவர் எஸ்.சக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

'சீடா', 'பிற்' நிறுவனங்களுடன் இணைந்து நடைபெறவுள்ள இந்த விழாவில் இப்பிரதேசத்தில் உள்ள அறவழிப் போராட்டக்குழுவின் பத்து சிறுவர் பாடசாலைகளின் சிறுவர்கள் கலந்துகொள்வர். (1-111)

* * *

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கிடையில் நடைபெற்ற நாட்டுக்கூத்து போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு இடையிலான மாவட்டப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (1-111)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

உரும்பிராய் 'கிட்ஸ் பார்க்' முன்பள்ளியின் சிறுவர் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் முன்பள்ளியில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளிச் சிறுவர்களின் ஆக்கங்கள், கற்றல் உபகரணங்கள், கற்றல் கையேடுகள் போன்ற பல்வேறுபட்ட பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் வித்தியாலய அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கம் உலக சாரணர் நூற்றாண்டு விழாவையொட்டி சீருடை அன்பளிப்புச் செய்யும் நிகழ்வை நாளை காலை 10 மணிக்கு சண்!டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்த இருக்கின்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண பொறியியலாளர் சங்கத் தலைவர் சி.உருத்திரலிங்கம் கலந்துகொள்வார். (1)

* * *

மு.சிங்கராயர் எழுதிய 'செம்மனத்தான்' நூல் வெளியீட்டுவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடு நிலையத்தில் இடம்பெறவிருக்கின்றது.

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்துகொள்வார். (1)

* * *

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற வருடாந்த பரிசளிப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.த.ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

* * *

கைதடி,ஓக.3

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற இருப்பதாக மாவட்ட சமூகசேவை அலுவலர் த.கிருபாகரன் தெரிவித்தார். (1-75)

* * *

கைதடி மற்றும் நாவற்குழி பிரதேசங்களில் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் உள்ள சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் ந.பாலச் சந்திரன் கேட்டுள்ளார். (50-75)

# இளவாலை யங் ஹென்றீசியன் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.3

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இளவாலை யங் ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

தினமும் மாலை 3 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியில் முதலாம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெறும் அணிகளுக்கு பணப் பரிசில்களும் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும்.

அத்துடன் சிறந்த ஆட்டநாயகன், சிறந்த ஆட்டத் தொடர் நாயகன், சிறந்த கோல் காப்பாளர், ஒழுக்கமுள்ள அணி ஆகியவற்றுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

ஆட்ட விவரங்கள் வருமாறு:-

இன்று வெள்ளிக்கிழமை -

* அராலி திருமகள் எதிர் நாவாந்துறை சென்.நீக்கிலஸ்.

* மாதகல் சென்.தோமஸ் இளைஞர் எதிர் தெல்லிப்பழை நாமகள்

நாளை சனிக்கிழமை -

* மயிலங்காடு ஞானமுருகன் எதிர் தெல்லிப்பழை யுத் யூனியன்.

* மாதகல் சென்.தோமஸ் எதிர் கொக்குவில் காளியம்பாள்.

5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை -

* பாடும்மீன் 'பி' எதிர் இளவாலை இளஞ்சுடர்.

* ஏழாலை கண்ணகி எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ்.

6ஆம் திகதி திங்கட்கிழமை

* அச்செழு வளர்மதி எதிர் நாவாந்துறை கலைவாணி

* பாடும்மீன் 'ஏ' எதிர் கலை ஒளி

7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை -

* அளவெட்டி டயானா எதிர் அராலி செனிஸ்ரார். (50-86)

# விளையாட்டு விழாக்கள்

சுழிபுரம்,ஓக.3

வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கலைவாணி முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் த.ஜெயராசா சனசமூகத் நிலையத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு பொறுப்பதிகாரி ஞா.தேவச்சந்திரன் கலந்துகொள்வார். (1-28)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை, சனசமூக நிலையம் என்பவற்றின் கீழ் இயங்கும் ஸ்ரீ சுப்பிரமணிய முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலையத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி கலந்துகொள்வார். (50-86)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

நீர்வேலி வடக்கு பகவான் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் த.நடராசா கலந்துகொள்வார். (50)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

நவக்கிரி புத்தூர் சரஸ்வதி முன்பள்ளி விளையாட்டு பிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட் ழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக சர்வோதயம் நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் அ.சி.சிவசுப்பிரமணியமும் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசனும் கலந்துகொள்வார்கள். (50)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.3

புத்தூர் புதுவையூர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் நா.சண்முகரத்தினம் தலைமையில் இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் கலந்துகொள்வார். (50)

* * *

ஆவரங்கால் கிழக்கு லிங்கன் முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் கலந்துகொள்வார். (50)

# வதிரி பொமேர்ஸ் அணி சம்பியன்

யாழ்ப்பாணம்,ஓக.3

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வலைபந்தாட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கடந்த 26ஆம் திகதி இந்தப் போட்டி நடைபெற்றது. முதலில் கரவெட்டி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணியும், கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன. இதில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி 12 புள்ளிகளையும் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணி 11 புள்ளிகளையும் பெற்றன.

அடுத்த போட்டியில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கலைமதி விளையாட்டுக் கழக அணியும் மோதின. இதில் பொமேர்ஸ் 13 புள்ளிகளையும், கலைமதி 3 புள்ளிகளையும் பெற்றன.

இறுதிப் போட்டியில் றேஞ்சர்ஸ் அணியும் பொமேர்ஸ் அணியும் மோதின. இதில் பொமேர்ஸ் அணி 16 புள்ளிகளைப் பெற்றுச் சம்பியனானது. றேஞ்சர்ஸ் அணி 8 புள்ளிகளைப் பெற்றது. (50-70)

## விளையாட்டு

# பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் இறுதிப் போட்டிகள் இன்று ஆரம்பம்

கொமர்ஷல் வங்கியின் அனுசரணையுடன் யாழ் மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் 15 வயது, 17 வயதுப் பிரிவு அணிகளுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

17வயதுப் பிரிவுக்கான இறுதிப் போட்டி இன்றும் நாளையும் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமாகும் இறுதிப்போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.கமலநாதனும் சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திராவும் கலந்து கொள்வார்கள்.

15 வயதுப்பிரிவினருக்கான இறுதிப் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

இந்தநிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சிறிலங்கா கிரிக்கெட் தேசிய அபிவிருத்தி நிலையத்தின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் வி.டே. சண்முகலிங்கம் கலந்து கொள்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொமர்ஷல் வங்கி

COMMERCIAL BANK

அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயது 17வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் இறுதிப் போட்டிகள்.

### 17 வயதுப் பிரிவு

சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் யாழ்.இந்துக்கல்லூரி

*இடம் :-* சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்

*காலம் :-* இன்று (03-08-2007) பிற்பகல் ஒரு மணி
நாளை (04-08-2007) முற்பகல் 9 மணி

*பிரதம விருந்தினர் :-* P.கமலநாதன், இளைப்பாறிய அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி

*சிறப்பு விருந்தினர் :-* S.ரவீந்திரா, முகாமையாளர்
கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்.

### 15 வயதுப் பிரிவு

சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி

*இடம் :-* யாழ்.மத்திய கல்லூரி

*காலம் :-* 11-08-2007 சனிக்கிழமை முற்பகல் 8.30 மணி

*பிரதம விருந்தினர் :-* V.K.சண்முகலிங்கம், இணைப்பாளர்,
வடக்கு, கிழக்கு மாகாணங்கள்,
தேசிய அபிருத்தி நிலையம்,
சிறிலங்கா கிரிக்கெட்,
செயலாளர் JSCA.

(63142)



## விமான பொதிகள் சேவை

உங்கள் பொதிகளை யாழ் - கொழும்பு அல்லது கொழும்பு - யாழ் தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.
கிளியரன்ஸ் இல்லாத பொருட்களுக்கு MOD பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்

**கொழும்பு - யாழ் - 1Kg 250/=**
**யாழ் - கொழும்பு - 1Kg 200/=**

EURO GROUP OF COMPANIES
35, STATION RD, MOUNT LAVINIA.
TEL: 077 3846998, 0114 542190

INTERNATIONAL COURIER SERVICE
11, VIHARA LANE, COLOMBO 06.
TEL: 011 4961196, 077 3561891



## மோட்டார் சைக்கிள் - விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MD 90 NP.MP XXXX இலக்கம் கொண்ட ஹொண்டா மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு

*தொடர்பு இல: 25, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி* (63136)



## ஒத்துமாறல்

யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்த பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் வவுனியா தெற்கு நகர பாடசாலை ஒன்றில் கடமை புரியும் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகின்றார்.

*தொடர்புகளுக்கு:*
0779116296, 0774016553

(63097)



## விற்பனையாகின்றது CD கள் [illegible]லம் SPOKEN ENGLISH

ஆங்கிலம் சரளமாகப் பேசவிரும்பும் அனைத்து தரப்பினருக்கும் மிகவும் உகந்தது. வீட்டில் இருந்தவாறே விரும்பிய வேளையில் விரும்பிய தடவைகள் கற்றுக்கொள்ளலாம். மிகவும் பயனுள்ளது, விலை குறைவானது. இது உங்கள் வீட்டு ஆங்கில ஆசிரியன். (4 ACD + 20 VCD) இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது பிரதிகளுக்கு முந்துங்கள்.

பிரதியாக்கம் செய்ய முடியாதது

*கிடைக்கும் இடங்கள்:*

| | |
|---|---|
| பூபாலசிங்கம் புத்தகசாலை<br>பஸ் நிலையம்,<br>யாழ்ப்பாணம். | கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையம்<br>360, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.<br>222 9041 |
| துர்க்கா புத்தகசாலை<br>பஸ் நிலையம்,<br>சுன்னாகம். | பெடிலான்ட் பாமசி<br>ஆலடி சந்தி, மானிப்பாய்.<br>மாலை 3.30 - 4.30 |
| இராஜலஷ்மி மல்ரி பலஸ்<br>பஸ் நிலையம் எதிரில்<br>நெல்லியடி, கரவெட்டி. | ரெனி முக்குக் கண்ணாடியகம்<br>88, பிரதான வீதி,<br>பருத்தித்துறை. (63052) |





## சின்னமடுமாதா யாத்திரைத் தலத் திருவிழா

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 5 ஆம் திகதி திருவிழாத்திருப்பலி முற்பகல் 10 மணிக்கும் முதல் திருப்பலி காலை 7மணிக்கும் இடம் பெறும்.

*(பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்).*

✱ இரவில் தங்குவதற்கு அனுமதி இல்லை

**பரிபாலகர்,** (63078)
அருட்திரு. R.ஙிற்றர் துரைரத்தினம், அருட்திரு. யே.அ.அருள்தாசன்.



## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

கெருடாவில், தொண்டைமானாற்றைச் சேர்ந்த
**உதயகுமார் - சோதீஸ்வரி**
தம்பதியரின்
**செல்வப் புதல்வன் உமாநாத்**

தனது இரண்டாவது பிறந்ததினத்தை 03.08.2007 அன்று சுவிஸில் இருக்கும் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை சுவிஸில் இருக்கும் அப்பா, அம்மா சுவிஸ் பெரியப்பா குடும்பம் மற்றும் கனடா பெரியப்பா குடும்பம், நியூசிலாந்து ஆசை அத்தை குடும்பம், நியூசிலாந்து அம்மையா குடும்பம், இலங்கை- கெருடாவில் அப்பப்பா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார் மற்றும் ஆவரங்கால் அப்பம்மா, பெரியத்தை குடும்பம், பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், வவுனியா சின்னத்தை குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆவரங்கால் ஞான வைரவர் திருவருள் பெற்று நோய் நொடியற்று பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

**வன்னியசிங்கம் வீதி,**
**ஆவரங்கால்.** (62931)

*தகவல்:*
**அப்பம்மா.**






## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் -1 புறொயிலர் குஞ்சுகள் 03.08.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்பு:

✱ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

✱ மதுரா, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

✱ P. ரவி, கண்டிக்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

✱ தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை.



## புதுக்கடைத் திறப்பு விழா

**04.08.2007 சனிக்கிழமை மீண்டும்**

**புத்தூர் சந்தையில்**

அன்பர்கள், வாடிக்கையாளர்களின் நலன்கருதி நீண்ட இடைவெளிக்குப்பின்னர்

**ஆட்டிறைச்சிக்கடை**

திறக்கப்படவுள்ளது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

விசேட தினங்களிலும் திறக்கப்படும்.

*புத்தூர் சந்தை.* (63112)

ஆட்டிறைச்சிக்கடை உரிமையாளர்,
**M.S.M.றகுமத்துல்லா.**


# யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர்
# உயர்திரு. சின்னத்துரை சிவகுமாரன் அவர்களின்
# சேவைநலன் பாராட்டு மலர் - 03.08.2007

### பொருளியல் கற்பித்தலில் தடம் பதித்த ஆசான்...



*சின்னத்துரை சிவகுமாரன் அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருபத்து மூன்று வருடங்களாக பொருளியல், சமூகக் கல்வி, தமிழ் ஆகிய பாடங்களை மாணவர் மனதறிந்து கற்பித்த பெருந்தகை. இன்று தனது அகவை அறுபதில் ஓய்வுபெறுகின்றார். அவருடைய அர்ப்பணிப்பு நிறைந்த கற்பித்தல் பணியால் மாணவர் மத்தியில் தனி மரியாதை பெற்ற ஆசான். மாணவரின் தனியாள் வேறுபாடுகளை ஆய்ந்தறிந்து அவர்களுக்கேற்ற கற்பித்தலை மேற்கொள்வது அவரின் தனிச்சிறப்பு. நேரம் தவறாமை அவரின் இன்னொரு சிறப்பம்சமாகும். எமது கல்லூரியில் பொருளியல் பாடத்தை நீண்டகாலமாகக் கற்பித்து நிலையான ஓர் இடத்தைப் பதித்துக்கொண்ட பெருமை அவருக்குரியது என்றால் அது மிகையல்ல. அவரின் ஓய்வுகாலம் அவர்தம் குடும்பத்தாருடன் அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக அமைய இறைவனை இறைஞ்சுகிறேன்.*

S.V.மகேந்திரன்,
பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

### மாணவரின் மதிப்புக்குரியவர்



*ஒருவர் மாணவரின் நன்மதிப்பினைப் பெற்று நல்லாசிரியராக மிளிரவேண்டுமாயின் அவர் தனது துறையில் நிபுணத்துவமுள்ளவராகவும் மேலும் தனது ஆற்றலை மாணவருக்குத் தகுந்த முறையில் எடுத்து விளம்பக் கூடியவராகவும் மாணவரின்பால் நல்லெண்ணம் உடையவராகவும் இருத்தல் வேண்டுமெனப் பாடப் புத்தகங்கள் கூறுகின்றன. இவ்வகையான அம்சங்களுடன் கூடியவராக விளங்கிய சிவகுமாரன் அவர்கள் மாணவரின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக இருந்தமை அதிசயப்படக் கூடியதல்ல.*

*பொருளியல் பாடத்தில் ஆற்றலும் திறமையும் விருப்பும் கொண்ட ஆசிரியர் சிவகுமாராவார். மாணவர்களின் நலன் கருதி கல்லூரி முடிந்த பின்பும் விடுமுறை நாள்களிலும் அவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள் நடத்தி அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெருமுயற்சி எடுத்தவர்.*

*அளவாகவே பேசி எவரது மனமும் புண்படாது நடந்தவர். தனது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். யாரைப் பற்றியும் எவருக்கும் குறை கூறாதவர். நம்பிக்கைக் குரியவராக நடந்தவர். இப்படியான நல்ல அம்சங்கள் அனைத்தையும் அடுக்கடுக்காகக் கூறினால் அவை அத்தனையும் அவருக்குப் பொருந்தும். இப்படியான ஒருவர் ஓய்வுபெறுவது கல்லூரிக்குப் பெரும் இழப்பாகும். எனவே அவர் ஓய்வுபெற்ற பின்பும் அவரின் சேவையைக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுக்கக் கல்லூரிச் சமூகம் முன்வரவேண்டும்.*

*சிவகுமாரன் அவர்கள் ஓய்வுபெற்றாலும் அவரின் சேவை மாணவர்களுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்றும் அவர் நீடூழிவாழவேண்டுமென்றும் ஆண்டவனை வேண்டுகின்றேன்.*

அ.பஞ்சலிங்கம்,
இளைப்பாறிய அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

(63128)



**உயர்திரு. சின்னத்துரை சிவகுமாரன்**
B.A., Dip.in Ed., S.L.T.S - I

**ஆசிரிய சேவை**

**முதல் நியமனம் - 01.11.1976**

**பண்டாரவளை சென்.ஜோசப் கல்லூரி -**
**01.11.1976 - 31.08.1984**

**கொக்குவில் இந்துக் கல்லூரி -**
**01.09.1984 - 02.08.2007**

**ஆசிரியர் கழகம்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி.**

### ஆசிரியப் பணியைத் தெய்வீகப் பணியாய் மதித்தவர்




*சின்னத்துரை சிவகுமாரன் அவர்கள் ஆசிரிய சேவையில் பல ஆண்டுகள் பணியாற்றி இன்று தனது அறுபதாவது அகவையைப் பூர்த்தி செய்வதன் பேரில் இளைப்பாறுகின்றார். இவர் தனது ஆசிரியப் பணியில் சுமார் இருபத்திநான்கு வருடங்கள் தொடர்ச்சியாக கொக்குவில் இந்துக் கல்லூரியில் பணியாற்றிய பெருமைக்குரிய நல்லாசானாவார். இவர் சாதாரண தர மாணவர்களுக்கு சமூகக்கல்விப் பாடத்தினையும் உயர்தர மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தினையும் கற்பிப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்று விளங்கியவர். இவர் தன்னிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வாழ்விலும் சிறப்புற்றிருப்பதனைப் பெருமையோடு பேசிக்கொள்ளவார். உண்மையில் இவர் அத்தகைய பெருமைக்குரியவர்தான். இதற்கு இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இவர் மீது வைத்திருக்கும் மதிப்பும் நன்றியுணர்வும், அன்பும் சான்றாகும். இவர் தனது பணியைக் கடமை உணர்வுடன் மட்டுமல்லாது தெய்வீகப் பணியாகவும் மதித்துச் செயற்பட்டு வந்தார்.*

*இவர் தனது கற்பித்தற் செயற்பாட்டிற்கு மேலாக உயர்தர மாணவர்களின் செயற்திட்டங்களுக்கான பொறுப்பாசிரியராகவும், பொருளியற்பாட இணைப்பாளராகவும், இல்லப் பொறுப் பாசிரியராகவும் எனது காலத்தில் பணியாற்றியதுடன், தனது நீண்டகால சேவை அனுபவத்தைக் கொண்டு கல்லூரி நிர்வாகத்திற்கு வேண்டிய ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.*

*இவர் சேவையிலிருந்து இளைப்பாறுவது தவிர்க்க முடியாத போதிலும் இவரின் சேவை மாணவ சமுதாயத்திற்கு கல்லூரிக்கும் தொடர்ந்து கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதுடன் இவரது ஓய்வு காலம் சிறப்பாகவும், நலமாகவும் அமைய வேண்டுமெனவும் வாழ்த் துகின்றேன்.*

பொ.கமலநாதன், இளைப்பாறிய அதிபர்.

### அர்ப்பணிப்புடன் கற்பித்து வெற்றி கண்டவர்



*கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருதசாப்தங்களிற்கு மேலாக சிறப்புறச் சேவையாற்றி இன்று தனது அறுபதாம் அகவை நிறைவில் ஓய்வுபெறும் சின்னத்துரைசிவகுமாரன் அவர்களை வாழ்த்து வதில் பெருமகிழ்வடைகின்றேன். இவர் உயர்தர மாணவர்களுக்கு பொருளியல் பாடத்தினை எளிய நடையில் அர்ப்பணிப்புடன் கற்பித்து வெற்றி கண்டவர். இவரின் திறமையினால் தேசிய கல்வி நிறுவனத்தினால் பொருளியல் பாட வளவாளராகத் தெரிவு செய்யப்பட்டார். புதிய விடயங்களைத் தேடியறிந்து கற்பிப்பதன் மூலம் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார்.*

*இவரின் மென்மையான போக்கும் கடமையுணர்வும் சக ஆசிரியர்களுடன் பழகும் முறையும் அனைவரையும் கவரக்கூடியதாக இருந்தது.*

*இவரது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டி எமது ஆசிரியர்கள் அனைவருடனும் இணைந்து வாழ்த்துகிறேன்.*

இ.ச.உமாசுதன்,
தலைவர், ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசுக்கு எதிரான போராட்டம் 10ஆம் திகதி மாத்தறையில்

கொழும்பு,ஓக.3

மஹிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்க்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களையும், பொதுக்கூட்டங்களையும் நடத்திவரும் ஐக்கிய தேசியக் கட்சி அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக மாத்தறையில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 10 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டமும் பொதுக்கூட்டமும் மாத்தறை நகரில் இடம்பெறும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்தை ஐ.தே.கட்சியும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள் பிரிவும் இணைந்து நடத்தவிருக்கின்றன.

# பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்; ஜனாதிபதியுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடுவார்

யாழ்ப்பாணம்,ஓக.3

குடாநாட்டில் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடவுள்ளார்.

குடாநாட்டு வர்த்தகர்களுடன் அமைச்சர் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினார்.

அச்சந்திப்பு தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்பகுதியில் பொருள்களின் விலையில் ஒரு ரூபா அதிகரிப்பு ஏற்பட்டால் அம் மக்கள் துள்ளிக்குதிக்கிறார்கள்.

ஆனால், யாழ்ப்பாணத்தில் இன்றைய நிலையில் பொருள்களின் விலை இந்தளவு உயர்ந்துள்ள போதும் அது பற்றி எவரும் கண்டுகொள்வதில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது நிலவி வருகின்ற உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய அனைத்துப் பொருள்களினதும் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றார். இதில் ஒரு முக்கிய கட்டமாக புதனன்று யாழ்.வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்து அவர்களுடன் நீண்டநேரம் கலந்துரையாடினார். அப்போது இக்கருத்தைத் தெரிவித்தார்.

பொதுமக்களின் நலன் கருதிய திட்டங்களுக்கே தான் முக்கியத்துவம் அளித்து வருவதை எடுத்துக் கூறிய அமைச்சர் வர்த்தகப் பிரமுகர்களின் கருத்தையும் ஆலோசனைகளையும் வெளிப்படுத்தினால் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நல்லதொரு முடிவுக்கு வர இயலும் என்றும் அதன் மூலம் வெகு விரைவில் யாழ்.குடாநாட்டில் அனைத்துப் பொருள்களின் விலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்றும் கூறினார்.

இச்சந்திப்பின்போது வர்த்தகப் பிரமுகர்கள், கொழும்பில் இருந்து பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவருவதில் ஏற்படுகின்ற சிரமங்களை விளக்கிக் கூறினர். பொருள்களுக்கான அதிகப்படியான போக்குவரத்துக் கட்டணங்கள் போதியளவிலான கப்பல்கள் இல்லாமை அதிகளவு பொருள்களைக் கொண்டு வர இயலாமை, கொண்டுவரும்போது பொருள்கள் குறைதல் மற்றும் பாதிப்பு ஏற்படல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக அவர்கள் எடுத்துக் கூறினர்.

யாழ்.வர்த்தகப் பிரமுகர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக என்றுள்ளது. (1)

# ஆசிரியர்களாக நியமனம் பெறும் கல்வியியல் டிப்ளோமாதாரிகள் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக. 3

தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமாதாரிகள் 250 பேருக்கு நியமனம் வழங்கப்படுகின்றது.

நியமனம் பெறுபவர்களின் விவரம் வருமாறு:-(நேற்றைய தொடர்ச்சி)

சசிகலா தர்மலிங்கம் - பண்டத்தரிப்பு, சுசிகலா கதிர்காமத்தம்பி - பருத்தித்துறை, நவரத்தினமலர் தியாகராசா - புலோலி, செல்வராசா தில்லைவாசன் - கரவெட்டி, கிருஸ்ணபிள்ளை சந்திரகுமார் - கரவெட்டி, அருள் ஷாமிலா இராசதுரை - பருத்தித்துறை, ஜெயந்தா கதிர்காமத்தம்பி - இளவாலை, குமுதினி கந்தசாமி - சாவகச்சேரி, இராதிகா வன்னிமாறன் - வல்வெட்டித்துறை, கஜீபா பாலசுப்பிரமணிம் - இளவாலை, ஆன் செல்வகஜனி சரவணபவன் - மல்லாகம், சாந்தினி குணரத்தினம் - பண்டத்தரிப்பு.

வாணி பரராஜசிங்கம் - பருத்தித்துறை, கனகரெத்தினம் ஆதவன் - சுன்னாகம், முருகேசு ரமேஸ் - கரவெட்டி, சிவசுப்பிரமணியம் செந்தில் குகன் - புத்தூர், நடராசா பிர தீபன் - கரவெட்டி, பேரின்பநாயகி விநாயகமூர்த்தி - மாதகல், மதியாபரணம் மதிராஜ் - கொடிகாமம், சின்ரியா வேஜினி யேசுநேசன் - பருத்தித்துறை, நயனா நாகேந்திரன் - கரவெட்டி, நிஷாந்தினி குமரேசன் - திருநெல்வேலி, தங்கவடிவேல் செந்தூரன் - கரவெட்டி, பாமினி மதியூக நாதன் - உடுவில், கியோஜினி கிருஷ்ணபிள்ளை - சுன்னாகம், குணசிங்கம் லெனின்குமார் - நல்லூர், கோபாலகிருஷ்ணன் மதனகோபன் - யாழ்ப்பாணம்.

ஜிசிதா பூபாலசிங்கம் - ஏழாலை, துரைசிங்கம் இந்திரஜித் - சுன்னாகம், ஞானமூர்த்தி திரோணன் - அளவெட்டி, சிவகுமார் கமலமோகன் - சண்டிலிப்பாய், பாமினி ஆண்டிஐயா - கோப்பாய், சுவாமிநாதன் அஜிதரன் - யாழ்ப்பாணம், தாரணி பஞ்சரத்தினம் - கரவெட்டி, தர்மகுலசிங்கம் பாகீஸ்வரன் - மல்லாகம், குமாரசூரியர் செந்தில் குமாரன் - கொக்குவில், நல்லையா மோகனதாசன் - புத்தூர், சிவதர்சினி சந்திரசேகரம் - புலோலி, அனுஷா சண்முகராசா - புலோலி, சின்னத்தம்பி திருபரன் - தெல்லிப்பழை, ரஞ்சிதமலர் திருச்செல்வம் - காரைநகர்.

கணேசலிங்கம் கஜேந்திரன் - ஏழாலை, பாலசுப்பிரமணியம் பார்த்தீபன் - வரணி, ஜெயலட்சுமி இராமச்சந்திரன் - தெல்லிப்பழை, சிவசுப்பிரமணியம் நிறைஞ்சதுர்க்கன் - மானிப்பாய், சரத்சந்திரபோல் நிர்மலரூபன் - வல்வெட்டித்துறை, இராசரத்தினம் சுகேந்திரன் - உடுப்பிட்டி, மகேஸ்வரன் சுதாகரன் - சுன்னாகம், அன்னலிங்கம் ரதீஸ் குமார் - மல்லாகம், இரத்தினம் ஜெயகரன் - கொக்குவில், தெய்வேந்திரம் மணிவண்ணன் - சங்கானை, ஜெயசுதன் ஐவன் சோமநாதர் - வட்டுக்கோட்டை, அருளம்பலம் அருள்குமரன் - சுன்னாகம், கணேசரத்தினம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி - இணுவில், தர்மலிங்கம் சுரேஸ்குமார் - வல்வெட்டித்துறை, சந்திரகுமார் கஜேந்தன் - சுன்னாகம், கயந்தினி தர்மலிங்கம் - இளவாலை, நிறோஜா ஜெகநாதன் - ஆனைக்கோட்டை, கார்த்திகா நித்தியானந்தன் - இணுவில்.

கார்த்திகா சிவபுண்ணியம் - சாவகச்சேரி, புஸ்பலீலா தம்பிராசா - நீர்வேலி, சோபனா இரத்தினசிங்கம் சங்கானை, றஜீலா குணரத்தினம் - மாவிட்டபுரம், அருள்வதனா இராசையா - சுன்னாகம், லவதுசா செல்வநாயகம் - கந்தர்மடம், மேரி மேகலா ஜோன் எட்வேட் - பருத்தித்துறை, இராசதுரை சிறீதரன் - சுழிபுரம், சத்யா பாஸ்கரன் - கொடிகாமம், துஷ்யந்தி குகதாசன் - யாழ்ப்பாணம், விஜயா பிரான்சிஸ் - யாழ்ப்பாணம், கீதாஞ்சலி பாலசுப்பிரமணியம் - மிருசுவில், அஜெந்தினி பத்மநாதன் - யாழ்ப்பாணம், சுபாஜினி சிவபாதசுந்தரம் - சுன்னாகம், ரேணுகா தெய்வேந்திரன் - சுன்னாகம், பிருந்தா சாந்தகுமாரன் - பருத்தித்துறை, அனிற்ரா அலோசியஸ் - இளவாலை, வசந்தினிதேவி இராஜகோபால் - கைதடி, றாதிகா பரராசசிங்கம் - புலோலி, சுந்தரலிங்கம் சுஜீபன் - கொக்குவில், இராமகிருஷ்ணர் சிறீனிவாசன் - பருத்தித்துறை, கீர்த்திபா மணிவாசகம் - நல்லூர், மதுரா பத்மநாதன் - புத்தூர், சுதர்சினி - விநாயகமூர்த்தி - அல்வாய், கொன்சியா யாழினி மாசிலாமணி - உடுவில், உஷாநந்தினி ஐயாத்துரை - மட்டக்களப்பு, தர்சினி ஆனந்தராசா - கிளிநொச்சி.

குகதர்சினி அருமைநாதன் - பரந்தன், கார்த்திகா திசநாதன் - பூநகரி, கமலினி செல்லத்துரை - பூநகரி, சிவலிங்கம் கிருஸ்ணகுமார் - கிளிநொச்சி, இரத்தினநாயகம் கணேசலிங்கம் - வ/செட்டிக்குளம் மகாவித்தியாலம், வாணி கிருஷ்ணா இராதாகிருஷ்ணன் - பரந்தன், இராசேந்திரலிங்கம் பிரசாத் - வவுனியா, ரிஷாந்தினி நாராயணசாமி - வவுனியா, பாலரஜனி பாலசுந்தரம் - கிளிநொச்சி, இராசதுரை றஜனிகாந்த் - பூநகரி, ஆன்றொசான்சலின் சூசை பெரேரா - மன்னார், கறோலின் டயன்ஸ் சலெற்ரா திருஞானதீபன் - உயிலங்குளம், ஆபேல் ரூபன்கென்றிசன் றெவ்வல் - மன்னார், றொஷாணி மார்க்கஸ் - மன்னார்.

(வளரும்)

## தென்மராட்சி பிரதேச கலை, இலக்கிய விழா

தென்மராட்சி பிரதேச கலை, இலக்கிய விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன் கோயிலடியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் கலந்துகொள்வர்.


கடந்த 2005, 2006, 2007 ஆகிய காலப் பகுதிகளில் நடத்தப்பட்ட பிரதேச மட்ட கலை, இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கும் இவ்விழாவில் பரிசில்களும் வழங்கப்படும். (207)

## நமக்குள் இருக்கும் வரப்பிரசாதம்!

வழியில் ஒரு பொட்டலம் கிடந்தது. சிறு வன் ஒருவன் அதைக் காலால் தட்டித் தட்டி, கால்பந்தைப் போல் ஒரு சுவர் ஓரமாக ஒதுக்கினான். 'பொட்டலத்தில் என்ன இருக்குமோ?' என்று அவன் மனதில் ஓர் ஆர்வம் உண்டாகியது. யாருக்கும் தெரியாமல் அதை எடுத்தான். இரகசியமாக மெள்ளப் பிரித்தான். அதில் ஒன்றுமே இல்லை!

விழாவில் நினைவுப் பரிசு கொடுத்தார்கள். வாங்கிய பெரிய மனிதர் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார். பரிசின் மீது சுற்றிய தாளைப் பிரித்துப் பார்க்க ஆசை. ஆனால், பலர் முன் பிரிக்க ஒரு கூச்சம். காரில் வந்து அமர்ந்ததும் வேகமாகப் பிரித்தார். அது ஒரு சாதாரணப் பொருளாக இருந்ததைக் கண்டு சிறிது ஏமாற்றம்.

நாய், பூனை, ஆடு, மாடு போன்றவை கூட மூடிய பொருளை ஆர்வமாக ஆராய்கின்றன. இப்படிஎல்லா உயிர்களுக்கும் மறைந்திருக்கும் பொருளை அறியும் ஆர்வம் இயற்கையாக உள்ளது. இப்படி ஓர் உள்ளுணர்வை கடவுள் எல்லா உயிர்களுக்கும் கொடுத்துள்ளார்.




நம் உடம்பில் ஆன்மாவை மறைத்து வைத்துள்ளார். மறைந்திருக்கும் அதை விசாரித்தால், அந்த உணர்வே ஆன்மிக உணர்வாகிவிடும்! இதற்காகத்தான் கடவுள் ஆன்மாவை மறைத்தே வைத்தார்.

நண்பரின் தொலைபேசி எண்ணை நினைவுகூர முயற்சிக்கிறோம். நினைப்புக்கு வரவே இல்லை. 'அது கிடக்கிறது போ!' என்று பேசாமல் படுத்தால், அரை மணி நேரத்துக்குப் பின் நாம் முயலாமலே அந்த எண் நமக்குத் தெரிவிக்கப்படுகிறது. அப்படி நமக்குள் தானாக வரும் முயற்சி உள்ளுணர்வின் முயற்சியாகும். நாம் முயன்ற போது ஒரு வேகம், ஒரு சக்தி நமக்குள் சென்றது. ஆனால், தேடிய எண் கிடைக்கவில்லை. முயற்சியில்லாதபோது சக்தி இல்லாமலே நமக்கு அது தெரிவிக்கப்படுகிறது.

இந்த உள்ளுணர்ச்சியை அடிக்கடி உணர்வதால், கோயில் சந்நிதானத்தில் இதை எழுப்புவதால், இதனால் கடவுள் அலங்காரத்தில் ஈடுபடுவதால், தீப ஆரத்தியில் திளைப்பதால் கடவுள் பெயரைக் கூறிப் பரவசமாவதால், பஜனை செய்து பூரிப்பதால் இந்த உள்ளுணர்வு திரளும்... வலிமை பெறும். நமக்குள் பரவும்... கூத்தாடும்! இது கடவுள், உயிர்களுக்குத் தந்த ஓர் அடையாள (ரோக்கன்)வரப்பிரசாதம். இந்த முயற்சியை அடிக்கடி மேற்கொள்வதால் கடவுளை அடையும் முயற்சியில் நாம் பாதித்தூரம் முன்னேறுகின்றோம். இதைச் 'சைதன்யம்' என்று நூல்கள் கூறும். இது கடவுளால் தரப்பட்ட உள்ளுணர்வு.

*'தாக்காமல் தாக்க நின்றதோர் தற்பரம்*
*நோக்கக் குழையும் உந்தீபற*
*நோக்காமல் நோக்க என்று உந்தீபற*

என்றும் இந்த உணர்வுச் சாதனையைச் சாத்திரங்கள் புகழ்கின்றன. *(நன்றி: சக்தி)*

# சந்நிதி ஆலயப் பெருந்திருவிழா 12ஆம் திகதி ஆரம்பமாகின்றது

வடமராட்சி,ஓக.3


பிரசித்திபெற்ற தொண்டைமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின்னிரவு 5 மணி 14 நிமிடத்திற்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவின் பூங்காவனத் திருவிழா எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கும் கைலாசவாகனத் திருவிழா மறுநாளான 22ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கும் சப்பரத் திருவிழா 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கும் தேர்த்திருவிழா 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கும் மௌனத் திருவிழா அன்று மாலை 5 மணிக்கும் இடம்பெறுவதுடன் நிறைவுபெறும்.



ஏனைய திருவிழாக்களில் காலைத் திருவிழா 8 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 4 மணிக்கும் நடைபெறும்.

பெருந்திருவிழாக் காலத்தில் அன்னதானப் பணிகள் மேற்கொள்ளப்படும். பெருந்திருவிழாவை ஒட்டி விசேட போக்குவரத்து, சுகாதார, குடிதண்ணீர் வசதிகளை பக்தர்களுக்கும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




அரியாலை, பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திரு விழா நேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 14ஆம்திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1)

* * *

காரைநகர் அழகாபுரி வைரவ முருகன் ஆலய ஆடிப் பொங்கல் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.(1-29)

* * *

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் பெருந்திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்மானது.

தொடர்ந்து 11 தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 11ஆம் திகதி [illegible] தேர்த்திருவிழாவும் மறு[illegible] 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (1-75)

## நயினையில் திங்கள் ஆடிப்பூரத் திருவிழா ஆரம்பம்

நல்லூர்,ஓக.3

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் ஆடிப் பூரத் திருவிழா(பூரகர்மா) எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஒன்பது நாள்கள் நடைபெறவுள்ளது.

ஆடிப்பூர விழாவை முன்னிட்டு உற்சவ சிவாச்சாரியார்கள் 'சிவபூஜா கல்பநிதி' சிவஸ்ரீ சாமிநாத பாலசுந்தர சிவாச்சாரியார், 'கிரியா கலாபமுக்தாமணி' சிவஸ்ரீ ஜம்பு கேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார், 'ஆகம பிரவீணா' சிவஸ்ரீ கைலாசநாத வாமதேவ சிவாச்சாரியார் ஆகியோரால் தினமும் பகல், மாலை வேளைகளில் விசேட அபிஷேகங்கள், இலட்சார்ச்சனை ஆகியன நடத்தப்படும்.

திருமுறைப் பாராயணம், தீபாராதனைகள் இடம்பெறும்.

ஆடிப்பூர திருவிழாவில் பெருந்தொகையான அடியார்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (1-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன்
வி.இராஜலிங்கத்தின் அன்புத் தாயார்
**வீரசிங்கம் பூமலர்**

01.08.2007 இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஸ்ரீராம் ஆடையகம்,**
இல.17, நவீன சந்தை, சாவகச்சேரி.
இல.48, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
(63139)

## கண்ணீர் அஞ்சலி

கலாநிதி **அ.சோமசுந்தரம்பிள்ளை**
(பட்டயக் கணக்காளர்)

கல்விமானும், சமூகத்தொண்டனுமாகிய கலாநிதி அ.சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் மறைவையொட்டி எமது பாடசாலைச் சமூகம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றது. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்

துன்னாலை
காசிநாதர் வித்தியாலயம்,
கரவெட்டி.
(சி-53116)




**CB Computer Academy**
Station Road, Kondavil. ☏:-021-4590291

## தேவை

- வீடியோ செய்யக்கூடியவர்கள்
- ஒற்றபாட், ஓர்கன் இசைக்கக்கூடியவர்கள்
- நடிப்புத் திறமை உள்ளவர்கள்
- கதைவசனம், நாடகம் எழுதக்கூடியவர்கள்
- பாடல் திறமையுள்ளவர்கள்

விண்ணப்பிக்க விரும்புவோர் இன்று 03.08.2007 காலை 9 மணிக்கு நேரில் வரவும்.

**PMC**
443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.
(63152)

## Calling for Tenders Teaching Hospital, Jaffna

Tiling to O.P.D, TH, Jaffna

1. The Chairman of the Divisional Tender Board, Teaching hospital, Jaffna will receive sealed Tenders for Tiling to OPD, TH, Jaffna, up to 10.am on -15.08.2007. Tender Forms may be collected from Director Teaching Hospital, Jaffna up to 10.08.2007 on payment of nonrefundable deposit of Rs. 1000/-
2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.
3. Tender Forms are issued only to contractors having valid registration in grade-M9-and above in the field of building constructions and other institute of construction Training and Development (ICT AD) criteria and valid membership of National construction of contractors Association of Sri Lanka. (NCCASL)
4. Sealed Tenders may be despatched either by registered post or hand delivered to Director Teaching Hospital, Jaffna or deposited in the tender box at Teaching Hospital Jaffna on or before 10 a.m. on 15.08.2007.
5. Tender document may be inspected free of charge at the Resident Engineer's Office CECB TH. Jaffna.
6. For further details please contact Hospital Secretary. T.H.. Jaffna.

**The Chairman,**
**Divisonal Tender Board,**
**Teaching Hospital,**
**Jaffna.**
(C/53150)

## VACANCY

Save the Children in Sri Lanka

Save the Children in Sri Lanka (SCiSL) is an international Non Governmental Organisation, which is part of the International Save the Children Alliance, the world's largest independent movement for children working in 120 countries. For the past 30 years, SCiSL has been an advocate for children's rights and has worked hard to make real and lasting improvements in the lives of all Sri Lankan children irrespective of nationality, race or religion.

**We are looking for a committed, creative and energetic individual to join our team as a:**

### LOGISTICS OFFICER - PROCUREMENT

The post holder will be responsible for the day-to-day management of logistic functions in the designated SCiSL Office as part of an integrated logistics system. The principle aim of this post is to be responsible for the procurement and supplies, to manage the day-to-day logistic tasks and meet standardised performance targets.
**Please note that only Sri Lankan citizens are eligible to apply for the above position.**

Base Station: Jaffna
Remuneration: Gross Salary - Rs. 27,276/=

Essential Qualifications & Experience

1. Sound educational background with a good knowledge and experience in procurement techniques, including basic administration.
2. Ability to manage the Stores/ related staff effectively.
3. Good interpersonal and communication skills in written and spoken English and Sinhala/Tamil with computer literacy in Microsoft Office.
4. Teamwork, effective time management and leadership skills.
5. Ability to work independently using own initiative within the scope of responsibilities.
6. Ability and willingness to travel to all parts of the country.

**Please note:**

- Closing date for applications will be 08th August 2007.
- Age limit at SCiSL is 60 years.
- The above position would be for a period of one year.
- Save the Children in Sri Lanka is an equal opportunity employer and does not discriminate with respect to gender, religion, ethnicity or caste.
- The position applied for should be indicated on the top of your application and on the top left hand corner of the envelope. Please ensure that the names of two non-related referees are provided to:

E mail: amirdhabashini@savethechildren.lk

Postal : **Save the Children in Sri Lanka**
**HR/ Administrative Assistant**
**No. 146, Temple Road, Nallur**
**Jaffna.**

Only applicants selected for the interview will be contacted. No telephone enquiries please

Save the Children in Sri Lanka [SCiSL) is part of the world's largest independent movement for children working in 120 countries. SCiSL. is a non religious, non political, independent international organization working for the protection and the full realization of child rights. The four pillars of the Save the Children in Sri Lanka Programme are: **(a) Child Protection, (b) Education, including Early Childhood Education/Early Childhood Care and Development (ECE)/ECCD, (c) Household Economic Security and (d) Child Rights.** Our projects, both self implemented and in partners, hip with local organizations are carried out in over 18 locations throughout the country.
(C/53109)

**Protecting Rights - Promoting Responsibilities**

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகவும் 6 மாதங்களில் இலக்கண முறையிலும் கதைக்கப் பயில By: விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.
(63156)

## வீடும் காணியும் விற்பனைக்கு

ஆவரங்கால் கிழக்கு, புத்தூரில் யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் 2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
0773013614
(62669)

## உ
## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில்
## ஈழத்துச் சிதம்பரம்
## வருடாந்த தேவி மகோற்சவம் - 2007

சிவநேயர்களே!

நிகழும் சர்வசித்து வருடம் ஆடி மாதம் 21ஆம் திகதி (06.08.2007) திங்கட்கிழமை வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் பெருந்திரளாக வந்து மகோற்சவத்தினை கண்டு தேவியை வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்றேகுக.

மகோற்சவ கிரியை விவரம்:

| | |
|---|---|
| 06.08.2007 | திங்கட்கிழமை 10 மணிக்கு கொடியேற்றம் |
| 09.08.2007 | வியாழக்கிழமை மாலை 7.30 மணிக்கு கைலாச வாகனத்தில் அம்பாள் வீதி உலா வருதல் |
| 12.08.2007 | ஞாயிற்றுக்கிழமை 7ஆம் திருவிழா ஆடி அமாவாசை விரதம் |
| 14.08.2007 | செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று அம்பாள் தேருக்கு எழுந்தருவாள். |
| 15.08.2007 | புதன்கிழமை 10ஆம் திருவிழா தேவி தீர்த்தம், ஆடிப்பூரம் |

குறிப்பு: தினமும் காலைத் திருவிழா காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். மாலைத் திருவிழா 5 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆ.அம்பலவிமுருகன்
மு.சுந்தரலிங்கம்
ஆதீன கர்த்தர்கள்

ஈழத்துச் சிதம்பரம்
காரைநகர்.
(C53112)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**தர்மகுலசிங்கம் கமலாதேவி**

மலர்வு 03.01.1957
உதிர்வு 29.07.2002



*அன்புடனே எமைப்பெற்ற அன்னையே எங்கு*
*சென்றீர்கள்*
*கண்ணுக்குள் வைத்து எமைப் பேணியே*
*வளர்த்தீர்கள் அம்மா*
*என்பெலாமுருகுதம்மா உங்களைக் காணாதிங்கே*
*சென்றுமைத் தேடி நாமும் காண்பதுமெங்கே?*
*தீராத எம் கவலை தீர்த்திட யாருமில்லை*
*பாரினில் நாம் வாழும் வரை என்றென்றும்*
*உங்கள் நினைவுகளுடன்...*
*சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*
(அ-63112)

- குடும்பத்தினர்

## பதினோராம் ஆண்டு நினைவுகளில்...



அமரர் **சூரியர் சிதம்பரப்பிள்ளை**
(**C.T.B** பாதுகாப்பு உத்தியோகத்தர்)

*மண்ணில் 02-02-1935*
*விண்ணில் 03-08-1996*
*திதி: 03-08-2007*

*முத்துவின் மகனாய் வந்துதித்தீர்*
*வள்ளி மகளை மணந்தீர்*
*செல்வங்கள் நால்வரை பெற்றெடுத்தீர்*
*வையகத்தில் நாம் சிறக்க பிள்ளையாரை வேண்டினீர்*
*கல்வியில் எம்மை சிறக்க வைத்தீர்*
*நல்லுறவுகளை எமக்குப் பெற்றுத் தந்தீர்*
*நன்றாய் நாம் வாழும் நிலை காணவில்லை*
*எம் துயரமோ சொல்ல முடியவில்லை*
*பிள்ளையாரின் பாதங்களில் சேர்ந்து விட்டீரென*
*ஆறுதல் அடைகின்றோம் ஐயா!*
*உலகில் நாம் சிறப்புடன் வாழ*
*வானிலிருந்து வாழ்ந்திடுவீரே ஐயா!*

என்றும் உம் நினைவுகளுடன்...
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சி.மதன்மோகன்,*
*[illegible], திருகோணமலை.*
(62530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அரச பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண் விசேட சட்ட விலக்களிப்பு ஏற்பாடுதான்

ஆள்கள் கடத்தப்படுதல், காணாமற் போகச் செய்யப்படுதல், கொலை செய்யப்படுதல், அச்சுறுத்திக் கப்பம் அறவிடப்படல் போன்ற மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் கொழும்பில் மக்கள் கண்காணிப்புக் குழு நடத்திய இரண்டாவது மாநாட்டின் மூலம் இந்த விவகாரத்தின் மோசமான நிலைமையை சர்வதேச மட்டத்திற்கு அம்பலப்படுத்தும் வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது.

இந்த மோசமான மனித உரிமை மீறல்களின் பின்னணியில் 'அரச பயங்கரவாதமே' மூலகாரணமாக இருக்கின்றது என்பதும் இந்த மாநாடு மூலமாக அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்த விடயத்தில் அரசுத் தரப்பின் குள்ள நரித்தனத்தை வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றார் மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் மக்கள் கண்காணிப்புக் குழுவின் அமைப்பாளருமான மனோ கணேசன் எம். பி.

கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல் போன்ற சம்பவங்களோடு தொடர்புடைய பெரிய திமிங்கிலங்கள் வெளியே சுதந்திரமாகத் திரிகின்றன. அவற்றைக் கைது செய்து சிறையில் அடைப்பதை விட்டு, சிறிய மீன்களைக் கைதுசெய்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றக் கபட நாடகம் ஆடுகிறது அரசு என்பதை அப்பட்டமாகப் போட்டுடைத்திருக்கின்றார் அவர்.

இதேசமயம், தமிழர்களுக்கு எதிராக இலங்கைத் தீவில் சந்நதம் கொண்டு அட்டூழியம் புரிந்துவரும் அரச பயங்கரவாதத்துக்கு அடிப்படைப் பாதுகாப்புக் கவசமாக - காவல் அரணாக - சட்ட வேலியாக - அமைந்திருக்கும் விவகாரம் என்னவென்பதை சுதந்திர ஊடக இயக்கமும் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறை மாணவன் சகாதேவன் நிலக்ஷன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கொடூரத்தைக் கண்டித்து பகிரங்க அறிக்கையை வெளியிட்ட அந்த அமைப்பு, ''தவறிழைப்போருக்கு தண்டனையிலிருந்து விலக்களிப்பு வழங்கும் கலாசாரமானது, ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியாகும்'' - என்று தெரிவித்திருக்கின்றது.

ஊடகவியலாளர்கள் விவகாரத்தில் மட்டுமல்ல, இலங்கைத் தீவு முழுவதும் ஈழத் தமிழர்கள் கண்மண் தெரியாமல் சுட்டுக்கொல்லப்படுவதிலிருந்து, அவர்களை அவர்களது வாழிடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றுவது, அவர்களது தாயக பூமியையும் உடைமைகளையும் கபளீகரம் செய்வது வரை - தமிழர் விரோத நோக்கம் கொண்ட - அரச பயங்கரவாதச் செயல்கள் அனைத்துக்குமே சட்டப் பாதுகாப்பு அளிப்பது இந்த சட்ட விலக்களிப்பு ஏற்பாடுதான்.

இலங்கையில் அரச பயங்கரவாதத்துக்கு எதிராகக் குரல் எழுப்பி வரும் ஐ. நா. உட்பட்ட சர்வதேச அமைப்புகளில் தொடங்கி பல்வேறு சர்வதேச நாடுகள் வரை அனைத்துத் தரப்பினருமே, இவ்வாறு மக்களுக்கு எதிராகக் கொடூரம் புரியும் படையினரைக் காப்பதற்கு வழிசெய்யும் சட்ட விலக்களிப்பு ஏற்பாட்டைக் கண்டித்தே வந்துள்ளனர்.

மோசமான மனித உரிமை மீறல்களுக்கு வசதி அளித்து, வாய்ப்பு வழங்கிவரும் இந்த சட்ட விலக்களிப்பு ஏற்பாடுகளை முற்றாக ரத்துச் செய்து, மனித உரிமை மீறல் குற்றங்கள் விடயத்தில் குற்றவாளிகளைத் தண்டித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குமாறு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் இலங்கைத் தரப்பை வற்புறுத்தி வருகின்றமையும் இவ்விடயத்தில் கவனிக்கத்தக்கது.

விடுதலைப் புலிகளின் ஆயுதம் தாங்கிய வன்முறைப் போராட்டத்தை எதிர்கொண்டு முறியடிப்பதற்கான அரசின் நடவடிக்கைகளுக்கு சட்ட வலுவும், சட்டப் பாதுகாப்பும் வழங்குதல் என்ற பெயரில் இந்த சட்ட விலக்களிப்பு ஏற்பாடு நியாயப்படுத்தப்படுகின்றது.

படையினர் புரியும் மோசமான மனித உரிமை மீறல் குற்றங்களுக்கு அவர்களைப் பொறுப்பாக்காமல் பாதுகாப்பு வழங்கும் இந்த சட்ட விலக்களிப்பு வசதி, அப்பாவித் தமிழ் மக்கள் மீது கண்மண் தெரியாமல் அராஜகங்களை அரச பயங்கரவாதம் முன்னெடுக்கவும், சட்ட நியாயங்களுக்கும் தார்மீக நெறிமுறைகளுக்கும் மாறாக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடவும் படையினருக்கு வாய்ப்பளிப்பதோடு, அப்போக்கில் அவர்கள் தீவிரமாக ஈடுபட ஊக்குவித்து உத்வேகப்படுத்தும் ஏற்பாடாகவும் விளங்குகின்றது.

அரச பயங்கரவாதத்தின் ஊற்றுக் கண்ணாக - அதற்கான ஊக்குவிப்பாக - அமையும் இத்தகைய சட்டவிலக்களிப்புக்கான விசேட சட்ட ஏற்பாடுகள் விலக்கப்படாத வரை அரச பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது. அது மென்மேலும் தீவிரமடைந்து தமிழர் தேசத்தை நசுக்கி அழிக்கும் தனது கொடூரத்தை இன்னும் முடுக்கி விடுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

ஆயினும், அரச தலைமையின் பின்னணியில் தமிழர்களுக்கு எதிரான - மோசமான - மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்கள் தீவிரமடைந்து வருவதை நேரடியாக அவதானித்துத் தகவல் திரட்டுவதில் சர்வதேச சமூகம் அதிக விழிப்புடன் இருப்பதையும் நாம் மறந்துவிட்முடியாது.

அரசுத் தலைமையின் கொடூரங்களை அம்பலப்படுத்தும் விதத்தில் சர்வதேச அமைப்புகள் மட்டத்திலான பகிரங்க அறிக்கைகள் அடுத்த வாரத்தில்வெளியாக விருக்கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி வெளியாகும் போது சர்வதேச மட்டத்தில் இந்த அரசின் முகமூடி கிழிய உண்மைச் சொரூபம் அப்பலமாவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# படுகொலை குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தக் கோருகின்றது பத்திரிகையாளர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஓக. 3

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் மாணவன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தி குற்றவாளிகளை வெளிப்படுத்தி, அவர்களுக்குரிய தண்டனையை வழங்க வேண்டும் என அரசாங்கத்தைக் கோருகின்றோம்.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பயின்று வரும் மாணவனான சகாதேவன் நிலக்ஷன் ஆயுததாரிகளால் மிலேச்சத்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டதை எந்த நாகரிகம் படைத்த சமூகமும் ஏற்றுக் கொள்ளாது. எமது சங்கம் இந்த ஈனச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறது.

காலங் காலமாக எமது சங்கத்தை சேர்ந்தவர்கள் ஆயுத தாரிகளால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவள பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிக்க யாழ். பல்லைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளைக்கு அடி எடுத்துக் கொடுத்தவர்கள் எமது சங்கத்தினரே. அவரின் முயற்சியாலேயே யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளருக்கு டிப்ளோமா கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. இளைஞர்களும் யுவதிகளும் ஊடகத் துறையில் பயிற்சி பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி விழிப்பாகவும், செழிப்பாகவும், நேர்மையாகவும், துணிச்சலாகவும் செய்திகளை வெளிக்கொணரக் கூடிய ஒரு இளம் தலைமுறையினர் உருவாகிவரும் வேளையில், இப்பேரிடி எம்மைத் திகைக்க வைத்துள்ளது. ஊடகத்துறையில் மாணவர்கள் காட்டும் ஆர்வத்தை மழுங்கடிக்க இக் கொலை நடத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஊடகத்துறை மாணவர்களுக்கு விடுத்துள்ள அச்சுறுத்தலாகவும் இக் கொலையைக் கருதுகிறோம்.

ஏங்கித் திகைத்து நிற்கும் ஊடகவள மாணவர்களுக்கும் உயிர்நீத்த நிலக்ஷனின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் துயரத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். - என்றுள்ளது. (அ-1)

## பல்கலைக்கழக மாணவனின் படுகொலைக்கு பீடாதிபதிகள் கூட்டாகக் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக ஊடகவள மையத்தின் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பயின்று வரும் மாணவன் சகாதேவன் நிலக்ஷனின் படுகொலைக்கு பல்கலைக்கழக பீடாதிபதிகள் கூட்டாகக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சகல பீடங்களின் பீடாதிபதிகளும் கையொப்பம் வைத்து கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையிலேயே கவலையையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

நேற்றைய தினம் (ஓகஸ்ட் முதலாம் திகதி) ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் இதழியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவன் சகாதேவன் நிலக்ஸன் துப்பாக்கியால் சுடப்பட்டு அகால மரணம் அடைந்த செய்தி எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. மறைந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத்துவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல இன்னல்களுக்கு மத்தியில் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இத்துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளமை பல்கலைக்கழக சமூகத்தினர் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் பெரும் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. கொலைகள் எவரால் என்ன நோக்குடன் செய்யப்பட்டாலும் அவை கண்டிக்கப்பட வேண்டியவை. மனித உயிருக்கு மதிப்பளிக்க வேண்டியது அவசியம்.

பல்கலைக்கழகம் சுமுகமாக நடைபெறுவதை பல்கலைக்கழக சமூகமும் பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் பெரும் எதிர்பார்ப்போடு வரவேற்கின்றனர். திட்டமிட்டபடி பல்கலைக்கழக கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பை நாடி நிற்கின்றோம். - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பும் கண்டிக்கின்றது

யாழ்ப்பாணம்,ஓக. 3

இதழியல் மாணவன் நிலக்ஷனின் கொலையை எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதழியல் மாணவன் ச.நிலக்ஷனின் கொலை தொடர்பாக எல்லை கடந்த பத்திரிகையாளர் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கொலையாளிகளைக் கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும் என்று கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் ஊடகவியலாளருக்கு யாழ்ப்பாணம் ஒரு மோசமான பிரதேசமாக காணப்படுகிறது. கடந்த ஏப்ரல் மாதம் உதயன் பத்திரிகையாளர் வர்மன் கொல்லப்பட்டார். இப்போது இதழியல் மாணவனும் சாளரம் சஞ்சிகையின் ஆசிரியருமான நிலக்ஷன் கொல்லப்பட்டுள்ளார். இந்தக் கொலை அதிகாலை வேளையில் இடம்பெற்றுள்ளது. - என்றுள்ளது. (அ-120)

# மட்டு. மாவட்டத்தில் மீண்டும் கைத்தொலைபேசிச் சேவை

கொழும்பு,ஓக. 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வருடகாலமாக முடக்கி வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளன.

கிழக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை அரச படைகள் தீவிரப்படுத்திய பின்னணியில், அவை பற்றிய செய்திகள் கசியாமல் தடுக்கும் நோக்கிலும் கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகள் தங்கள் இடையேயான தொலைத் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதை தடுக்கும் வகையிலும் அங்கு இச்சேவை முடக்கி வைக்கப்பட்டதாகக் கருதப்பட்டது.

தற்போது இராணுவத்தினர் குடுமிமலையைக் கைப்பற்றி கிழக்கைப் புலிகளின் பிடியிலிருந்து மீட்டுள்ளனர் என்று கூறப்படுவதை அடுத்தே அப் பகுதியில் மீண்டும் கையடக்கத் தொலைபேசிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. (சி)

## பதிவுகள் குறித்து வழிகாட்டல் சேவை

யாழ்ப்பாணம்,ஓக. 3

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ள காலங்கடந்த பிறப்பு, இறப்பு தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளவுள்ள பொது மக்களுக்கான வழிகாட்டல் சேவை நாளை சனிக்கிழமை சாவகச்சேரி பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளது. (1-207)

## கடற்றொழிலாளர் பிரச்சினை குறித்து அமைச்சர் டக்ளஸ் தலைமையில் மாநாடு

யாழ்ப்பாணம்,ஓக. 3

குடாநாட்டில் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான மாநாடு ஒன்று நாளை முற்பகல் 11 மணிக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா தலை மையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போதைய குடாநாட்டுச் சூழ்நிலையில் தொழில்துறை சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துவருகின்ற குடாநாட்டு கடற்றொழிலாளர்களது அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடி தீர்வுகளைக் கண்டு கொள்ளும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாளை சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு விசேட மாநாடொன்றை யாழ்.அமைச்சு அலுவலகத்தில் நடத்தவுள்ளார்.

இதில் குடாநாட்டில் உள்ள கடற்றொழிலாளர்களது சங்கங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பு உயரதிகாரிகள் மற்றும் அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொள்ள உள்ளனர்.

இதேநேரம் அமைச்சரைச் சந்தித்து தங்களது பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடி தீர்வுகாண விரும்புவோர் 021 - 2229824 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நாளை

| | |
|---|---|
| ஆடி - 19 | சனிக்கிழமை 04.08.2007 |
| திதி : சஷ்டி | முன்னிரவு : 08.30 |
| நட்சத்திரம் : | ரேவதி |
| | முன்னிரவு : 09.17 |
| சுபநேரம் | : 03.04 - 04.34 |
| ராகுகாலம் | : 09.04 - 10.34 |

## உறவினர் வீட்டிலிருந்த மாசேரி இளைஞன் இரவில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஓக. 3

உறவினர் வீட்டிலிருந்து கதைத்துக் கொண்டிருந்த இளைஞர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு வரணி, மாசேரி, காட்டுப்புலம் பகுதியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ஆதவன் என அழைக்கப்படும் கிட்டிணன் வசீகரன் (வயது 22) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கிளைமோர் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள குடியிருப்புப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கொடிகாமம் பொலிஸார் இச் சம்பவம் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து, நீதிவான் நேற்று சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லுமாறும் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

(அ-1-50-207-78)

## இரண்டாம் தவணை இன்றுடன் முடிவு

யாழ்ப்பாணம், ஓக. 3

இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படவுள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 31ஆம் திகதிவரை இடம்பெறுகின்றமையால் பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக மீண்டும் செப்ரெம்பர் 4ஆம் திகதி மீள திறக்கப்படவுள்ளன.

அடுத்த மாதம் 4ஆம்திகதி மீண்டும் ஆரம்பமாகும் பாடசாலைகள் டிசெம்பர் 7ஆம் திகதி மீண்டும் 3ஆம் தவணை விடுமுறைக்காக மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தம் உரையில் பின்வருமாறு விளக்கியும், விவரித்தும் உள்ளார் :-

இலங்கையில் இனப்பிரச்சினை மோசமடைந்து வருகின்றது. இதை நான் உன்னிப் பாக அவதானித்துவருகின்றேன். வன்முறைகளிலிருந்து மூன்று லட்சம் சிவிலியன்கள் தப்பிப்பிழைத்திருக்கிறார்கள். மாறாமல் தொடர்ந்து இடம்பெயர்வுகளையே இவர் கள் மாதக்கணக்காக எதிர்நோக்குகிறார்கள்.

**குற்றச்சாட்டுகளின்றி நூற்றுக்கணக்கானோர் அரசாங்கத்தினால் தடுத்து வைப்பு**

அவசரகாலச் சட்டவிதிகளுக்கு புதிதாக வலுவூட்டப்பட்டுள்ளது. இது குற்றச்சாட்டு களின்றி எவரையும் கைது செய்வதற்கும், தடுத்து வைப்பதற்கும் பரந்தளவிலான அதி காரங்களை அரசுக்கு வழங்குகிறது. இதன் கீழ் மேலும் நூற்றுக்கணக்கானோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படைகள் நூற்றுக்கணக்கான தமிழர்களை கொழும்பிலிருந்து வெளியேற்றியுள்ளன.

இலங்கை அரச படையினரும், பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளும் இருதசாப்தகால இனப்பிரச்சினைச் சண்டையை மீள ஆரம்பித்துள்ளார்கள். இதன் விளைவான வன்முறைகளில் ஆயிரக்கணக்கான சிவிலியன்கள் மடிந்துள்ளனர். உயிரிழப்புகள் மேலும் நீடிக்கின்றன. இரு தரப்புகளும் இராணுவ அணுகுமுறையையே தெரிவுசெய்துள்ளன. இந்நிலைப்பாட்டில் சிவிலியன்கள் துன்ப துயரங்களுக்கும், இழப்புகளுக்கும் இலக்காகி வருகிறார்கள்.

இவ்விரு சாராரும் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபாடு கொள்ளவில்லை என்பது இதிலிருந்து தெட்டத்தெளிவாகின்றது. கடந்த 20 மாத காலத்துக்கு மேலாக ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர் என நம்பப்படுகிறது. மற்றும் 4,500 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்படாத துப்பாக்கி தாரிகளால் கடந்த மாதம் மனிதநேய சேவை நிறுவனமொன்றின் இரு ஊழியர்கள் சுட் டுக் கொல்லப்பட்டுள்ளார்கள். அதேவேளை, 10 மாதங்களுக்கு முன்னர் - மரண தண்டனை நிறைவேற்றும் பாணியில் - பட்டினிக்கு எதிரான செயற்பாடு என்ற தொண்டர் நிறுவனத்தைச் சேர்ந்த 17 உள்ளூர் ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மனிதாபிமான சேவையாளர்களுக்கு எதிரான படுமோசமானதாக்குதல் இதுவாகும். அதேவேளை, மனித உரிமைகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென அரசால் புதிய அமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவென அழைக்கப்படுகிறது.

எது எப்படியிருப்பினும் மனித உரிமை மீறல்களுக்கான எத்தனங்களையும் ஏதுக் களையும் குறைக்க அந்த ஆணைக்குழு தவறிவிட்டது. அதேவேளை, சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட சர்வதேச சுயா தீனக் குழுவின் சவாலுக்கும் இந்த ஆணைக் குழுவின் நம்பகத் தன்மையும், சக்தியும் இலக் காகியுள்ளன.

**பேச்சு நிலைக்குத் திரும்புவதற்கு காத்திரமான நடவடிக்கை தேவை**

தற்போது யுத்தம் மென்மேலும் முனைப்படைந்துவருகிறது. சண்டையைநிறுத்திவிட்டு, பேச்சு மேசைக்குத் திரும்புமாறு இரு சாராருக்கும் அழுத்தம் கொடுக்க சர்வதேச சமூகம் மேலும் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இனப்படுகொலைக்கோ, யுத்தக் குற்றங்களுக்கோ வழிசமைக்கக்கூடிய அளவுக்கு, சமீபத்திய வன்முறைகள் எல்லை தாண்டவில்லை. எனினும், அந்த நிலைமையை எட்டும் அள வுக்கு அட்டூழியங்கள் தலையெடுக்கும் வரை காத்துக் கொண்டிருக்காமல் தடுப்பதற்கான செயலில் நாம் ஈடுபடவேண்டும்.

இலங்கை தொடர்பான அமெரிக்காவின் முயற்சிகள் அதிகரிக்கப்படவேண்டும். இதற்கு ஆதரவான பிரேரணை ஒன்றை நான் இங்கு அறிமுகப் படுத்தியுள்ளேன். சமாதானப் பேச்சுகளை உடனடியாக ஆரம்பிக்கு மாறு சகல தரப்புகளையும் இது அழுத்தமாக வலியுறுத்துகின்றது.

இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாகாது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது அரசியல் அபிலாசைகளின் நிமித்தமான பயங்கரவாதத் தைக் கைவிட்டுவிட வேண்டும். கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலான பயங்கரவாதத்தால் இலங்கையில் தமிழரின் வாழ்க்கையை வளப்படுத்த இயலவில்லை.

இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட வேண்டும். நாட்டில் நிரந்தர சமாதானம் கட்டி எழுப்பட வேண்டும். இவற்றை நோக்காகக் கொண்ட முயற்சிகளே தேவை. ஆத லால் சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் பேச்சு வழிக்குத் திரும்ப வேண்டும். - இப்படி அவர் அமெரிக்க வெளிவிவகாரக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார். (சி)

# அரசிலிருந்து விலகியது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டது. என்றாலும் சில சமயங்களில் வி.புத்திரசிகாமணி எம்.பி. இ.தொ.கா. தலைமையோடு முரண்பட்டுக்கொண்டு அரசுப்பக்கத்தில் தொடர்ந்து இருப்பதற்கு வாய்ப்பு உண்டு என அரசுத் தரப்புத் தக வல் தெரிவித்தது.

நேற்று முற்பகல் ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் மற்றும் கட்சியின் பிரதித்தலைவர் இரா. யோகராஜன் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

அப்போது, மலையகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் ஆற்றிய உரை தொடர்பாக ப்ஸில் ராஜபக்ஷ சூடாகக் கேள்வி எழுப்பினார் எனக் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தை 'மஹிந்த சிந்தனை' யின் அங்கமாக அறிவிக்காமல் புறம் ஒதுக்கி பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் பேசினார் எனக் குறிப்பிட்ட பஸில், அதற்காக இ. தொ. காவினரைக் கடுமையாகக் கடிந்து கொண்டாராம்.

ஆனால் சம்பந்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கை 'மஹிந்த சிந்தனை' உருவாக்கத்துக்கு முன்னரே திட்டமிடப்பட்டது என்பதால் அதை 'மஹிந்த சிந்தனை' அடிப்படையிலானது எனக் கூறவே முடியாது என இ. தொ. காவினர் வாதிட்டிருக்கின்றனர்.

இதையடுத்தே வாதம் முறுகி சூடு பிடித்திருக்கின்றது. மிக மோசமான வார்த்தைப் பிரயோகத்துக்கு உள்ளான இ. தொ. கா. தலைவர்கள் அந்தச் சந்திப்பில் வைத்தே பதவி விலகி, அரசில் இருந்து வெளியேறத் தீர்மானித்து, அந்த முடிவை உடனடியாகச் செயற்படுத்தினர் என்று கூறப்பட்டது.

மிகத் தரக்குறைவான வார்த்தைகளினாலான அர்ச்சனைக்கு இ.தொ.கா. தலைவர்கள் உட்பட்டமையை அடுத்தே இந்த முடிவை எடுக்கும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர் என்று இ. தொ. கா. வட்டாரங்கள் தெரிவித்தன.

பதவியை ராஜினாமாச் செய்ததை அடுத்து, இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கொட்டகலைக்கு விரைந்தார். அவரோடு தொடர்பு கொள்ள அரசுத் தலைமை எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை எனத் தெரியவந்தது.

இதற்கிடையில் நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கத்தோடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரையாடினார் எனத் தெரிகிறது.

"நீங்கள் என்னுடைய அரசில் அமைச்சர்களாக இருக்கிறீர்களா அல்லது பஸில் ரா்ஜபக்ஷவின் அரசில் அமைச்சர்களாக இருக்கிறீர்களா? பஸிலோடு கோபித்துக்கொண்டு எனது அரசில் இருந்து வெளியேறுவது சரியா?" என்று ஜனாதிபதி, முத்துசிவலிங்கத்திடம் கேட்டார் எனத் தெரிகிறது.

இதேசமயம், இ.தொ.காவுடனான முரண்பாடு தீர்க்கப்பட்டுவிட்டது என்ற சாரப்பட சில செய்திகள் அரச தரப்பினால் நேற்று மாலை கசிய விடப்பட்டன. ஆனால், இ.தொ.கா வட்டாரங்கள் அதை அடியோடு மறுத்ததோடு, இணக்க நிலை ஏற்படுவதற்கு வாய்ப்பே இல்லை என்று உறுதியாகத் தெரிவித்தன.

இந்தப் பின்னணியில் இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் சமரசம் செய்யும் நோக்கில் அரச உயர்மட்டம் தனது தூதுவர்களை இன்று காலை கொட்டகலைக்கு அனுப்பக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

# நாடுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவ்வாறானதொரு நிலை ஏற்படும் பட்சத்தில் சர்வதேச தலையீடுகள் இலங்கை யில் ஏற்படக்கூடும் எனவும், ஆஸ்திரேலிய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஹறெத் இவன்ஸ் கருத்துத் தெரிவித்துள்ளமை குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

நாடுகள் சில தத்தமது விருப்பங்களுக்கு ஏற்ப தெரிவிக்கும் இவ்வாறான கருத்துக்களை ஏற்று கொள்வதென்பது முடியாத ஒன்று. நாம் திட்டமிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது திட் டங்கள் உரிய பலனை அளித்து வருகின்றன. அவற்றை சிறந்த முறையில் நாம் தொடர்ந்து முன்னெடுப்போம். எக் காரணம் கொண்டும் அரசு யுத்தத்தை நிறுத்தாது - என்றார். (சி)

# பால்மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொள்கின்றனர்.

இதேபோன்ற ஆர்ப்பாட்டங்களை நாட ளாவிய ரீதியில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரம் தெரிவித்துள்ளது.

# தொழில்நுட்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள வகுப்புக்கு வழமைபோல் இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை மோட்டார்சைக்கிளில்வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-50-68-78)

# மங்கள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டியபோதே இத்தகைய விரிசல் எதிர்பார்க்கப்பட்டதுதான் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

"ஜனாதிபதியின் சகோதரர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இ.தொ.கா. தலைவர்களுக்கும் இடையில்தான் நேரடி முறுகல் இடம்பெற்றுள்ளது. இந்த முறுகலை - முரண்பாட்டை - ஜனாதிபதி தாமே நேரடியாகத் தலையிட்டு, இரு சாராரையும் அழைத்து சமரசம் செய்வதற்கான வாய்ப்பு உண்டா?" என்று கேட்டதற்கு -

அதை நிராகரிக்க முடியாது என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

# அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு வந்ததை அடுத்து அது 119 ஆகக் குறைந்தது. இதற்கிடையில் ஐ.தே.க. பக் கத்திலிருந்து அரச பக்கத்திற்கு வந்த 17 எம்.பிக்களில் ஒருவர் மீண்டும் ஐ.தே.க. பக்கம் திரும்பிவிட்டதால் மேலும் ஒரு எம்.பியை அரச தரப்பு இழந்தது.

இப்போது இ.தொ.காவின் ஆறு எம்.பிக்களும் மீண்டும் எதிரணிக்கு வந்துவிட்டதால் நாடாளுமன்றில் அரசின் பலம் 112 ஆகக் குறைந்திருக்கின்றது.

மொத்தம் 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றில் சபாநாயகர் நீங்கலாக இறுதி 224 எம்.பிக்களில் சரி அரை வாசித்தொகையினர் இப்போது அரசு பக்கத்திலும், எதிரணிப் புக்கத்திலும் உள்ளனர்.

# பதுளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகர சபையினருக்கும் அறிவிக்கப்பட்டதும், பதுளை மாநகர சபையின் தீயணைக்கும் வாகனம் உடனடியாக தீ ஏற்பட்டிருக்கும் இடத்திற்குச் சென்று தீ மேலும் பரவாத வகையில் தடுக்கப்பட்டது.

தீ மேலும் பரவியிருக்குமேயானால், அப்பகுதியில் அமைந்திருக்கும் அரச விடுதிகள் பலவும் சேதமாகி பலத்த பாதிப்புகள் ஏற்பட்டிருக்குமென பதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ எவ்வாறு ஏற்பட்டதென்பது குறித்து. பதுளை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


அறிவொளி Nallur
அல்போன்ஸ்
A/L 08 Micro Biology
Sat. Sun 2.30
A/L 09. Diversity
Sat.Sun 4.30
ஆரம்பம் 04.08.2007 Sat.
Func. Animal
Sat., Sun. 3.30 p.m.
சிங்கனம் M. சொலமன்
Sat.,Sun. 2.30

பொருளியல்
N.B கஜீதரன்
A/L 2009
பொருளாதார அமைப்புக்கள்
ஆரம்பம் 04.08.2007
சனி 6.15 a.m.
N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ் றோட்,
இணுவில்.

கணக்கீடு
மலிகஜன்
A/L 2008 & 2009
PAPER CLASS
(VAT கணக்கீடு)
Sat. Sun 5 - 6 p.m.
ஆரம்பம் : 05.08.2007
Sun. 5 p.m.
BRAIN POWER INSTITUTE

Diploma in Computerized Accounting
(With Manual Accounting)
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
03.08.2007 வரை 60% சலுகை
MCS
Supported By UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன்
விடுமுறை கால வகுப்புகள்
கலை, வர்த்தகப் பிரிவு
2008 A/L 2009
புதிய பிரிவு ஆரம்பம் : 04.08.2007
Sat. 8 a.m.
Note: நேர அட்டவணை அலுவலகத்தில்
நாவலர்
(63164) ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year3-10)
Start on: 05,07.08.2007
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170

PHYSICS
A/L 2008
Paper Class
ஆரம்பம் :
04.08.2007
Sat., Sun.,
4.30 - 5.30 p.m.
By. K. Selvan
NAVALAR
JAFFNA.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
05, 07.08.2007
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN VISUAL BASIC
KIDS PROGRAMMING
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

விக்னா கல்வி நிறுவனம்
விடுமுறை வகுப்புகள்
கலைப்பிரிவு 2008,2009

| | |
|---|---|
| Ec. | கஜீதரன் |
| Tam. | குழந்தை |
| H.c. | பத்மராஜா |
| Log. | கமல் |
| Geo. | பாபு |
| Che. | வசந்தன் |
| His. | வாகீசன் |
| Ram. | மயூரன் |
| Hin. N.T. | தரன் |
| P.Sci. | ஸ்ரீரங்கநாதன் |

மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு ஓர் நன்மை
Valvoline MOTOR OILS
★ 4000 Km வரை பாவிக்கக் கூடியது.
★ TVs. Bajaj, LML மோட்டார்கம்பனிகளின் அங்கீகாரம் பெற்றது.
★ இஞ்சினிற்கு சிறந்த பாவனையைக் கொடுக்கிறது.
மற்றும் Valvoline Forkoil விற்பனைக்கு உள்ளது.
எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முகவர்களுக்கு
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ITALING 90, PONY மோட்டார் சைக்கிள்களும்
விற்பனைக்கு வந்துள்ளன.
மீண்டும் விற்பனைக்கு வந்துள்ளது.
SCOOTY PEP +
TVs Company யின் அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்.
ஏக விநியோகஸ்தர்கள்
யசோ மோட்டார்ஸ்
165, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-53130)

கணக்கீடு
A/L : 2008
கம்பனி
A/L : 2009
S. தவா
B.Com. (Hons) (Acc. spl.)
New Science Hall

கணக்கீடு
A/L 2008 &
2009&
O/L 2007/AAT
Group Classes
எடுக்கப்படும்.
0777529113, 0777113880.


# மரண அறிவித்தல்

## தணிகாசலம் சசிருபன்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் 164, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவனும் யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவனுமாகிய (H.N.D.A.) தணிகாசலம் சசிருபன் நேற்று (02.08.2007) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த தணிகாசலம் - சகுந்தலாதேவி தம்பதியரின் அன்பு மகனும் தவயோகம், அஜந்ததாசன், அமலன், சிவரூபி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. தணிகாசலம் (தந்தை).
164, கண்டி வீதி,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.
(63164)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org